**கொலன்னாவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொலன்னாவ நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நடப்பாண்டுக்காகவும் முன்னைய ஆண்டுக்காகவும் செலுத்த வேண்டிய கழிவுப் பொருள் அகற்றும் கட்டணம் முறையே ரூபா 31,126,530 தொகை ரூபா 29,470,256 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதிக்குரிய செலுத்த வேண்டிய செலவினங்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | முன்னைய ஆண்டுகள் முதல் முத்துராஜவெல கெரவலபிட்டிய கழிவுப் பொருள் தளத்திற்கு செலுத்த வேண்டிய கணிசமான நிலுவைப் பணமொன்று காணப்பட்டதுடன் அந்த நிலுவைப் பணத்தை கணக்கு வைப்பதற்கும் சபையில் வருமானம் காணப்படவில்லை. அதனால் அந்தப் பட்டியல்களின் கட்டணங்கள் தொடர்பாக அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நடப்பாண்டின் போது 2016 ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 50,000,000 தொகையான முத்திரைக் கட்டணம் மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கில் செலவு | முன்னைய ஆண்டிற்காக 2018 ஆம் ஆண்டின் போது கிடைத்த வருமானம் மிகை | 2016 ஆம் ஆண்டிற்காக 2018 ஆம் ஆண்டின் போது மேலதிகமாக கிடைத்த தொகை ரூபா 500 இலட்சம் ஆண்டின் நிச்சயமற்ற வருமானமாக கருதி 2018 ஆம் ஆண்டின் வருமானத் |

| | | | |
|---|---|---|---|
| | வைப்பதற்கு பதிலாக பொது வைப்புக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | மற்றும் பற்றாக்குறை கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டும். | தலைப்பில் செலவு வைக்கப்பட்டு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக குறைநிரைப்பு மூலம் மூலதன செலவின தலைப்பிற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டின் போது செயற்திட்டமொன்று திட்டமிட்டு ஆரம்பிப்பதற்கு போதியளவான காலம் காணப்படாமையினால் அந்தப் பணம் வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்பட்டு வைப்புக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக இந்தப் பணத்தை ஈடுபடுத்துவதற்கு தேவையாக இருந்தமையால் அவ்வாறு செய்யப்பட்டது. |
| (iii) | நடப்பாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் செலுத்த வேண்டிய நீர் கட்டணம் முறையே ரூபா 2,568,180 தொகை மற்றும் ரூபா 44,062,878 தொகை என்பன கணக்கீடு செய்யப்படவில்லை. | சகல செலுத்த வேண்டிய செலவினங்களும் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 133 ஆம் பிரிவில் நிதி ஏற்பாட்டின் கீழ் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது நீர்த் தூண் குளியல் அறைகளுக்காக பட்டியல்களை தீர்த்தல் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. மிகவும் கனிசமான எண்ணிக்கையில் காணப்பட்ட இதனை வரையறுக்க வேண்டி இருந்ததுடன் தற்போது 17 மாத்திரமே காணப்படுகின்றது. இவை தொடர்பாகவும் தொடர்ச்சியாக மேற்பார்வை மேற்காள்ளப்பட்டதுடன் அவற்றை துண்டித்தல் தொடர்பாக சபை இணக்கப்பாட்டிற்கு வராதிருந்தமையும் அறியத்தருகின்றோம். |
| (iv) | சபைக்குச் சொந்தமாக பௌதீக ரீதியில் காணப்படாத ரூபா 18,730,764 தொகையான மோட்டார் வாகனங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இந்த சொத்துக்கள் தொடர்பாக கண்டறிந்து சரி செய்யப்பட வேண்டும். | இந்த வாகனங்கள் பௌதீக ரீதியில் காணப்பட்டதுடன் நகர சபைக்கு சொந்தமான சகல வாகனங்களையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்குகளை சரி செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் 194100173792765 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் நிதிக் காசோட்டின் பிரகாரம் மீதி ரூபா 190,920 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் அப்பெறுமதி ரூபா 52,133 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதியல் உள்ளவாறு காணப்பட்ட காசுமீதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை இந்தக் கணக்கின் வங்கி இணக்கக் கூற்று காணப்படாமையினால் கணக்கு இணக்கங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் நாளதுவரையாக கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. தற்போது வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தும் காசேட்டின் பிரகாரம் மீதி மற்றும் காசுக் கணக்கு மீதிக்கிடையிலும் வங்கி மீதிக்கிடையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. எதிர்காலத்தில் இயலுமானவரை கணக்குகளின் மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | ஆதனவரிக் கணக்கின் பிழைகளை சரி செய்வதற்காக ஆதன வரி கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 440,546 தொகையான ஆதன வரி வருமானத்தை குறைப்பதற்கு பதிலாக நிதி உதவி மற்றும் மானியக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சகல செலவினங்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் சரி செய்வதற்கும் அதன் பின்னர் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (vii) | நடப்பாண்டின் புதிதாக சேகரிக்கப்பட்ட ஆதனவரிக் கட்டணம் ரூபா 2,234,598 தொகையான ஆதன வரி வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக உதவிப்பணம், பங்களிப்புப் பணம் மற்றும் மானிய செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததது. | சகல வருமானங்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் சரியாக செய்வதற்கும் அதன் பின்னர் இவ்வாறான வழுக்கள் ஏற்படாதிருப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (viii) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பொதுக் களஞ்சியக் கணக்கின் மீதி ரூபா 47,431,690 ஆக இருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 12,000,790 ஆக இருந்தமையால் சொத்துக்கள் ரூபா 35,430,900 | நிதிக்கூற்றுக்களில் சரியான இருப்பு பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். | பொதுக் களஞ்சியக் கணக்கிற்கும் வருடாந்த இருப்பு பட்டோலைகளின் மீதிகளுக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் பல வருடங்கள் முதல் கொண்டுவரப்பட்டமையால் அந்த வேறுபாடுகளை சரி செய்வதற்காக 2019.03.12 ஆம் திகதி நடைபெற்ற மாகாண அரச கணக்குகள் செயற்குழு |

| | | |
|---|---|---|
| தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | அறிக்கையின் பிரகாரம் விஷேட மெய்மையாய்வு சபையினை நியமித்து கையிலுள்ள இருப்புக்கள் மற்றும் இருப்புக் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளின் மீதிக்கும் இடையே ரூபா 14,177,942 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | கணக்கு மீதியும் பட்டோலைகளின் மீதியும் இனக்கம் செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போதும் பட்டோலைகளினதும் கணக்குகளினதும் மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல வருட காலமாக முன் கொண்டு வரப்படுகின்ற 04 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 998,410 கூட்டுத்தொகையான பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பவில்லை. | பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டரீதியாக அறவிடுவதற்கு முடியாத நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்கான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலதிகமாக பெறப்பட்ட ஆதனக்கடன் வட்டித்தொகை உரிய கால எல்லையில் தீர்மானித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெறவேண்டிய காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை கணக்கிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 25,489,777 தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டில் புதிய கணக்குகள் முறைமைக்கு உரிய சகல நிலையான சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பெறப்பட்ட மீதியின் பிரகாரம் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டம் | | | |
| (i) | 33 ஆம் பிரிவு | சபைக்குரிய 15 ஆதனங்கள் தொடர்பாக உரித்து, உரிமை நகர சபைக்கு சொந்தமாக்குவதற்காக போதியளவான கையளித்தல் சான்றிதழ் அல்லது ஏனைய ஆவணங்கள் சபையிடம் காணப்படவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் சபையின் சகல ஆதனங்களுக்காகவும் உரித்துறுதி மற்றும் நில அளவையாளர் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 33(2) ஆம் பிரிவு | நகர சபைக்கு சொந்தமாக காணப்பட்ட சகல அசைவுறாத ஆதனங்களினதும் நிர்வகிக்கப்பட்டு அதில் பெறப்படுகின்ற வருமானம் நகர சபை | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டளைச் சட்டத்தின் பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் முடியுமாக இருந்த போதிலும் சபைக்குரிய 11 ஆதனங்களை இனங்கண்டு நிர்வகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (iii) | 133 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது நீர் வழங்கல் முறைமை நடாத்திச் செல்லப்படாதிருக்கும் போதும் மற்றும் குடியிருப்பாளர்களின் நீர் கட்டணம் அறவிடப்படாதிருக்கும் போதும் பொது நீர்த் தூண்களுக்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு மாதாந்தம் ரூபா 204,015 வீதம் வருடத்துக்கு ரூபா 2,568,150 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கொலன்னாவ நகர சபை அதிகார பிரதேசத்தில் பொது நீர்த் தூண் குழியலறைகளுக்காக பட்டியலிடல் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது 17 மாத்திரமே உள்ளது. இவற்றை துண்டிப்பது தொடர்பாக சபை இணங்காது இருந்தமையையும் அறிவித்துக் கொள்கின்றோம். |
| (ஆ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விஷேட ஏற்பாடுகள் சட்டம் | சபை அதிகாரப் பிரதேசத்தில் சகல அசைவுறாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்படாமல் 07 வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | மதிப்பீட்டை திருத்துதல் இவ்வாண்டில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் மதிப்பீட்டின் தாமதத்தை தவிர்ப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதி விடுதிகளுக்கு 6 வீதம் தொடக்கம் 8 வீதம் வரையும் வியாபார நிலையங்களுக்கு 18 சதவீதம் 20 சதவீதம் வரையும் திருத்தப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(1) மற்றும் 104(2) | சிறியரக கெப் வண்டி 2017 யூலை 28 - 31 இற்கு இடையிலான காலப்பகுதியில் விபத்துக்கு உட்பட்டமை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(5) | தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 68,000 தீர்க்கப்படாத முற்பண மீதியொன்று காணப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ரூபா 25,000 முற்பணத்தொகை 2019.02.08 ஆம் திகதி பற்றுச் சீட்டு இலக்கம் 04604 இன் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் திடீர் விபத்துக்காக சட்டத்தரணி கட்டணத்தை செலுத்துவதற்கு பெறப்பட்ட ரூபா 20,000 முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 571 | வைப்பு செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை இனங்கண்டு அல்லது விசாரணை செய்து வருமானத்திற்கு எடுக்கவேண்டிய போதிலும் ரூபா 250,000 கூட்டுத் தொகையான 02 வருடங்களை விஞ்சிய 04 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மங்களபாய வைப்பு மற்றும் வீதி இழப்பீடுகளுக்காக வைப்புச் செய்யப்பட்ட பணம் தொடர்பாக செய்திப் பத்திரிகை அறிவித்தல் செய்ததன் பின்னர் வருமானத்திற்கு எடுப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். வருமானத்திற்கான வைப்பு தொடர்பாக பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். வருமானத்திற்கு எடுக்க வேண்டிய வைப்புக்கள் அங்கீகாரத்தின் கீழ் வருமானத்திற்கு எடுப்பதற்காகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| **(ஈ)** | 2016 நவம்பர் 09 ஆம் திகதி LGD/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கை | கடை வாடகை மதிப்பீடு 03 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | அடிப்படைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை திருத்த வேண்டியிருந்தது. தற்போது காணப்படுகின்ற மதிப்பீடு 2014 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் அதன் மதிப்பீட்டை பூர்த்தி செய்து அதன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | | | 2020 முதல் புதிய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| **(உ)** மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ விதி 18(1) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்தப்படுகின்ற வரித் தொகைக்கு மேலதிகமாக கழிவுப் பொருட்களை வீட்டிற்கு வீடு சேகரிக்கும் செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்காக சபையினால் அனுமதிப் பத்திரத்தில் காணப்பட்ட வீடு மற்றும் வியாபார நிலையங்கள் 1060 இல் இருந்து கழிவுப் பொருள் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | கழிவுகளுக்காக வரியொன்றை அறவிடுவதற்கு சபை விரும்பவில்லை. கழிவுப் பொருள் 01 லோட் டெக்கர் (டெக்கர் டேலர்) இற்காக சகல வரிகளும் ரூபா 10,000 தொகையொன்று வியாபார சமூகத்திடமிருந்து அறவிடுவதற்கான முன்மொழிவு 2018 ஆகஸ்ட் மாத பொதுக் கூட்டத்தின் போது சபையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஒக்தோபர் சகல வியாபார சமூகத்திற்கும் எழுத்து மூலம் அறிவித்து 2018 நவம்பர் மாதம் முதல் அந்த பணம் அறவிடப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,798,316 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,310,981 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நடைமுறைக் கணக்கு இல. 194100153792766 (கொலன்னாவ மக்கள் வங்கி) | | |
| 1993 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,000 தொகையான காசு மாற்றல்கள் மற்றும் குறித்த காலத்தில் கண்டறிய முடியாத மாற்றப்படாத ரூபா 10,104 தொகையான காசோலைகள் | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1980 ஒக்தோபர் 17 ஆம் திகதிய ப/31462934 ஆம் இலக்கத்தின் கீழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு கிடைத்த ரூபா 10,104 தொகையான காசோலைகள் மாற்றப்படாத காசோலையாக வங்கிக் |

| | | | |
|---|---|---|---|
| | வங்கிக்கூற்று மீதியில் சேர்க்குமாறு காண்பிக்கப்பட்டுள்ளது. | | கணக்குக் கூற்றில் இதுவரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2019.05.15 ஆம் திகதி உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதுடன் கிடைக்கின்ற ஆலோசனையின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று ரூபா 15,000 தொகையை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நடைமுறைக் கணக்கு இல. 194100173792765 (கொலன்னாவ மக்கள் வங்கி) | | |
| | பல வருட காலமான முன் கொண்டுவரப்படுகின்ற (வங்கி வழுக்கள், காசு மாற்றல்கள்) ரூபா 172,721 தொகையான வங்கி மீதியில் சேர்க்கப்பட்டு வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 70,237 தொகை அந்த மீதியில் குறைக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட சீராக்கங்களை உறுதிப்படுத்துவதற்காக எந்தவித சான்றுகளும் கணக்காய்வுகளும் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்று ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காசு மாற்றல்களில் இனங்காணப்பட்ட ரூபா 89,921 பெறுமதியான மற்றும் காசு மாற்றல்களின் கீழ் குறைப்பதாக காண்பிக்கப்பட்ட ரூபா 70,237 இல் ரூபா 69,405 மேலதிக வைப்பாக குறிப்பிடப்பட்ட தொகை இது வரையிலும் தீர்க்கப்பட்டுள்ளது. ரூபா 400 தொகைக்கு மேற்பட்ட வைப்புகளான குறிப்பிடப்பட்ட பணம் இதுவரையிலும் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. ஏனைய விடயங்களை இயலுமான வரை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 75,000,000 | 80,095,023 | 76,544,002 | 30,471,237 | 74,620,000 | 83,379,116 | 75,566,342 | 43,887,616 |
| (ii) | வாடகை | 4,499,670 | 15,437,540 | 15,238,566 | 3,370,102 | 13,543,760 | 7,428,269 | 8,179,133 | 3,128,043 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 300,000 | 1,499,515 | 1,499,515 | 43,450 | 850,150 | 462,250 | 462,250 | 43,450 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,740,191 | - | 16,740,191 | - | 10,984,500 | - | 21,036,951 | - |
| | மொத்தம் | 96,539,861 | 97,032,078 | 110,022,274 | 33,884,789 | 99,998,410 | 91,269,635 | 105,244,676 | 47,059,109 |

### 2.3.2 ஆதன வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் நிலுவை ஆதனவரி, நடப்பாண்டில் ஆதனவரி சிட்டையிடல் மற்றும் தண்டப்பணம் என்பவற்றை உள்ளடக்கியதாக அறவிடவேண்டிய ரூபா 123,982,633 தொகையில் ஆண்டின் போது ரூபா 76,544,002 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அறவிடவேண்டிய மீதி மொத்த ஆதனவரி சிட்டையிடல்களில் 38 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானத்தைத அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2019 யூன் மாதம் முதல் ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தி நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிலுவை மீதி ரூபா 50,000 இனை விஞ்சிய அரசாங்க மற்றும் தனியார் துறையின் 56 ஆதனங்களில் இருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய நிலுவை ஆதனவரிப் பெறுமதி ரூபா 14,425,756 ஆகும். இந்த நிலுவை அத்திகதியில் காணப்பட்ட மொத்த நிலுவையில் 47 சதவீதம் ஆகும். சபையினால் இந்த நிலுவை ஆதனவரி பெறுமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தைத அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவை ஆதனவரி காணப்படுகின்ற இடங்களில் இருந்து இறுதிக் கட்டளை விநியோகித்ததன் பின்னர் ரூபா 4,716,206 தொகை (இது சதவீதமாக 48 சதவீதமாகும்) அறவிடப்பட்டுள்ளது. ஆதனங்களை தடை செய்வதன் மூலம் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

2.3.3 **வீட்டு வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி முதல் திசெம்பர் வரை 15 வீடுகளில் இருந்து ரூபா 231,250 தொகையான வாடகை வருமானம் கிடைக்கப்பெற்றதுடன் 2018 நவம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்ந்தும் பெற வேண்டிய நிலுவை வாடகை ரூபா 726,220 ஆக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது வரையில் காணப்படுகின்ற நிலுவை வாடகையில் ரூபா 112,580 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | வெல்லம்பிடிய புதிய வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள 08 வீடுகளில் 2018 ஆம் ஆண்டில் அறவிட வேண்டிய நிலுவை வாடகை மற்றும் நடப்பாண்டு வாடகைகளில் எந்தத் தொகையும் செலுத்தப்படாமையினால் 02 வீடுகளில் இருந்து 2018 நவம்பர் 30 இல் அறவிடவேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 254,400 ஆகும். | நிலுவை வருமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது வரையில் காணப்படுகின்ற நிலுவை வாடகையில் ரூபா 70,580 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | நடப்பாண்டிற்குரிய வாடகைப் பணம் முழுமையாக செலுத்தப்படாது மற்றும் நிலுகைக் கடைகளில் ஒரு பகுதி மாத்திரம் செலுத்திய 02 வீடுகளில் இருந்து 2018 நவம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய மொத்த தொகை ரூபா 168,420 ஆகும். | நிலுவை வருமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது வரையில் காணப்படுகின்ற நிலுவை வாடகையில் ரூபா 20,000 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பெறுமதி | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| | ரூபா | | |
| மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,610,146 தொகையான 04 பணிகளின் வேலைகள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தது. | 768,432 | திட்டமிடப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். | மக்களின் எதிர்ப்பின் அடிப்படையில் இந்த வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. |

(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 1,102,143 பெறுமதியான 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக நிறைவேற்றுவதில் தாமதம் காணப்பட்டது. | சரியாக திட்டமிடப்பட வேண்டும். | இந்த வேலை ஆரம்பிப்பதற்கு தாமதமானவை நிர்மாண நடவடிக்கைகளை செய்கின்ற போது அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தமையால் தாமதம் ஏற்பட்டிருந்தது. |

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) கழிவுப் பொருள் முககாமைத்துவம் உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுகளை 100 சதவீதம் ஒதுக்கப்பட்டு கையளித்தல் கட்டாயமாக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கொலன்னாவ நகர சபை 2019 ஆம் ஆண்டு வரையில் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்றுக் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் முத்துராஜவெலயில் இருந்து அனுப்பப்பட்ட கழிவுப் பொருள் தொடர்பான அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் முத்துராஜவெல கழிவுப் பொருள் தளத்தில் 7875 தொன் அகற்றப்பட்டிருந்ததுடன் அதில் 3957 தொண் கலவை கழிவுப் பொருட்களாகும். | | |
| (ii) | நகர சபை நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ விதிகளின் 18(1) பந்தியின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகளில் இருந்து கழிவுப் பொருள் கட்டணம் அறவிடப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கழிவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நகர சபையின் பொதுச்சபை இணங்கி இருக்கவில்லை. பொதுச் சபையின் அங்கத்தவர்களினால் குறைந்த வருமானம் பெறும் மக்களிடம் இருந்து இன்னும் சுமையை அதிகரிக்கும் என அதனை அமுல்படுத்த முடியாது என கூறியிருந்தனர். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவித்திருக்கவில்லை. | 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.01.31 ஆம் திகதி உள்ளூராட்சி நிறுவனங்களின் திட்டங்களுக்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்குவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது. அதனால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக சபைக்கு அமுல்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டிலேயே முடியுமாக இருந்தது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்** | | |
| சபையின் செயலாளர் பதிவிக்காக நிர்வாக சபையின் III/II பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்ட போதிலும் இதற்காக ஏனைய சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் அந்தப் பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | இரண்டு உயர் முகாமைத்துவ பதவிகளுக்குரிய ஊழியர்கள் தாமதமின்றி நிரப்பப்பட வேண்டும். | 2019.03.31 ஆம் திகதியில் கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளை வெற்றிடங்கள் ஒவ்வொரு காலாண்டு அறிக்கையிலும் ஏனைய விஷேட சந்தர்ப்பங்களின் மூலமும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடம் மாற்றலாகிச் சென்ற 26 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,432,744 தொகையும் சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 57 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,139,407 தொகையும் உள்ளடக்கி ரூபா 56,270,376 தொகை அறவிட வேண்டியிருந்தது. | அறவிட வேண்டிய ஊழியர் கடனை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 11 உத்தியோகத்தர்களிடமிருந்து முழுக் கடன் மீதியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன். சேவையை விட்டுச் சென்ற 09 உத்தியோகத்தர்களுக்குரிய பிணையாளர்களிடமிருந்து கடன் பணம் தவணை பணமாக மாதாந்தம் அறவிடப்படுகின்றது மிகுதி கடன் மீதி எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு உரிமைத்தன்மை உள்ள 04 ஏக்கர் 01 ரூட் 25.92 பேர்ச் அளவான 11 காணிக்கூறுகளுக்காக உரித்துறுதி காணப்பட்ட போதிலும் பௌதிக ரீதியில் இனங்கண்டு நில அளவைப்படம் தயாரித்து அவற்றை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணியைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த ஆதனங்கள் கடந்த காலத்தில் சபைக்கு உரித்தாக காணப்பட்ட போதும் இது வரையிலும் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வில்லை. பல வருட காலங்களுக்கு முன்னர் இந்த ஆதனங்கள் பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பல்வேறு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன். சபைக்கு உரிமைத்தன்மை காணப்படாமை இந்த ஆதனங்களின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமாக இருக்கவில்லை. |

### 3.3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 3,706,365 பெறுமதியான 02 வாகனங்கள் பல வருட காலமாக குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது. | சகல சொத்துக்களும் வினைத்திறனாகப் பயன்படுத்தப் பட வேண்டும். | கம்பெக்டரை பழுது பார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் டெக்டர் பெகோ மிகவும் பழைமையானதால் விற்றுத்தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இனங்கானப்பட்ட நட்டங்கள் பழுதடைந்த சபைக்கான மேசைகள், கதிரைகள் என்பவற்றை கொள்வனவு செய்யும் போது ஆகக் குறைந்த | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து | பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கேள்வி சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்படாமல் இரண்டாவது குறைந்த விலை குறிப்பிட்ட கேள்வி தாரரை கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் சபைக்கு ரூபா 281,361 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டும். | |
| (ஆ) | சபையின் மின்சார மின் பொருட்களை கொள்வனவு செய்யும் போது 125 வோல்ட் ஒஸ்ரம் மேகரி 600 மின் குமிழ்களை கொள்வனவு செய்வதற்காக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்படாமல் இரண்டாவது குறைந்த விலை குறிப்பிட்ட கேள்விதாரின் கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் சபைக்கு ரூபா 84,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டி கோவையின் 4.2.1(அ) இன் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகைத் திட்டம் 2018 இல் தயாரிக்கும் போது பிரதான பெறுகைத்திட்டம் தொடர்பாக சரியான அனுபவம் இல்லாமையினால் அறிந்திருக்காததன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தாமத வழுக்களின் அடிப்படையில் ஏற்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு ஆலோசனைகளைப் பெற்று உரிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | காணிகளை அபிவிருத்தி செய்தல் சுடலைக் கூடங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் வீதிகளை அபிவிருத்தி | பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் | மேற்கூறப்பட்ட பதில் பொருந்தும். |

| | |
|---|---|
| செய்தல் வடிகாண்களை நிர்மாணித்தல் என்பவற்றிக்காக பாதீட்டிலிருந்து ரூபா 14,500,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். 2018 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஐயவினா சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக 06 உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் 03 இற்கான பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |